## தாஷ்கென்ட்டில் நடைபெற்ற எஸ்.சி.ஓ. அரசு தலைவர்களின் மாநாட்டில் வெளியுறவுச் செயலர் உரையாற்றினார்

நவம்பர் 29, 2013

உஸ்பெகிஸ்தானில் தாஷ்கென்ட் நகரில் நவம்பர் 29ந்தேதி நடைபெற்ற ஷாங்காய் ஒத்துழைப்பு நிறுவன (எஸ்.சி.ஓ.) அரசு சபைகளின் தலைவர்களின் மாநாட்டிற்கு இந்திய உயர்மட்டக்குழுவினருக்கு வெளியுறவுத்துறை செயலர் திருமதி சுஜாதா சிங் தலைமை தாங்கினார். சபையில் பேசிய அவர் இந்த பிராந்தியத்தில் துரித பொருளாதார மேம்பாடு மற்றும் இணைப்பிற்கும், பயங்கரவாதத்தை எதிர்கொள்ளவும் அமைதியை ஊக்கப்படுத்துவதற்கும் எஸ்.சி.ஓ.ஆற்றக்கூடிய பங்கினை விளக்கினார். ஆப்கானிஸ்தானின் மறுகட்டுமானத்திற்கும் மறுகட்டமைப்பிற்கும் எஸ்.சி.ஓ. கூடுதல் பங்காற்ற வேண்டும் என்று அவர் அழைப்பு விடுத்தார்.

எஸ்.சி.ஓ. மாநாட்டையொட்டி, உஸ்பெகிஸ்தான் துணை வெளியுறவுத்துறை அமைச்சர் திரு முரட் அஸ்கரோவ், உஸ்பெகிஸ்தான் வாணிபம், சுரங்கம் மற்றும் தொழிற்துறை அமைச்சர் திரு முகமதுரெஜோ நெமாட்ஜாதே, ஆப்கானிஸ்தானின் இரண்டாவது துணை அதிபர் திரு முகமது கரீம் கலிலி மற்றும் எஸ்.சி.ஓ.வின் பொதுச் செயலர் திரு டிமிட்ரி மெஜன்ட்சேவ் ஆகியோரை சந்தித்தார்.

2005ம் ஆண்டு முதல் எஸ்.சி.ஓ.வின் பார்வையாளர் நாடாக இந்தியா விளங்குகிறது. 6 உறுப்பினர்கள் கொண்ட இந்த அமைப்பு தற்போது தனது உறுப்பினர் எண்ணிக்கையை விரிவுபடுத்த திட்டமிட்டுள்ளது.

**தாஷ்கென்ட்**
**29நவம்பர், 2013**